# மறுரூப மலையின் காட்சி

## மத்தேயு 17:1-9

1. இயேசு மறுரூபமாகி, மிகவும் பிரகாசமாய் சீஷர்களது கண்களுக்கு காணப்பட்டார். மோசேயும் எலியாவும் அவரோடு பேசுகிறவர்களாகக் காணப்பட்டார்கள். பேதுரு, யாக்கோபு, யோவான் ஆகிய மூன்று சீஷர்களுக்கும் மறுமலையில் கண்ட காட்சி நிஜ நிகழ்ச்சியைப்போல் காணப்பட்டது.

2. மோசேயையும், எலியாவையும் ஒருபோதும் பார்த்திராத அந்த மூன்று சீஷர்களும் மோசேயையும், எலியாவையும் கண்டுகொண்டது, அது ஓர் தரிசனம் என்பதை விளக்குகிறது. மேலும் இயேசு, அந்த சமயத்தில் இன்னும் சிலுவையில் மரிக்கவும் இல்லை, மரித்தோரிலிருந்து எழுந்திருக்கவும் இல்லை. நாம் அறிந்திருக்கிறபடி, இயேசுவே மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பிறப்பாயிருக்கிறார் "அவனவன் தன் தன் வரிசையிலே உயிர்ப்பிக்கப்படுவான், முதற்பலனானவர் கிறிஸ்து; பின்பு அவர் வருகையில் அவருடையவர்கள் உயிர்ப்பிக்கப்படுவார்கள்." (1கொரி 15:23). அப்படி இருக்க மோசே உண்மையாவே மறுரூபமலைக்கு வந்திருந்தாரேயானால் இயேசு, உயிர்த்தெழுதலின் முதற்பலன் என்று எப்படிக் கூற முடியும். **மோசேயும் மற்ற மனிதர்களைப்போல மரணத்தில் ஒன்றுமறியாத மவுனத்தில் இருக்கிறார்** அல்லவா?.

3. பரி.யோவான் வெளிப்படுத்தின விசேஷமான தரிசன புத்தகத்தில் மிருகத்தையும் அதன் தலையையும் அதன் கொம்புகளையும் போன்ற பலவற்றை தான் பார்த்ததாகக் கூறுமிடத்து தனது சரீரக் கண்ணோடு பார்த்தாரா? இல்லையே. அவர் எல்லாவற்றையும் தரிசனத்தில் தான் கண்டார். ஏனெனில் அப்படிப்பட்ட மிருகங்கள் ஒன்றும் பரிசுத்த யோவானைச் சுற்றி துள்ளி பாய்ந்து கொண்டிருக்கவில்லை. பரி.யோவான் தனது புத்தகத்தை ஆரம்பிக்கும்பொழுது (வெளி 1:1) அவைகள் அடையாளப்படுத்தப்பட்ட தரிசனங்கள் என்று கூறுகிறார். (**Signified** ஆங்கில வேதாகமம் காண்க.)

4. எப்படி பரி.யோவானுக்கு பத்மு தீவில் கண்ட காட்சி உண்மையாக நிகழ்ந்ததைப் போல இருப்பினும் அது தரிசனமாயிருந்தது போல

மறுமலையில் கண்ட காட்சியும் ஒரு தரிசனமே. மனுஷ குமாரன் மரித்தோரிலிருந்து எழுந்திருக்கும் வரைக்கும் இந்த தரிசனத்தை ஒருவருக்கும் சொல்ல வேண்டாம் என்று இயேசு கட்டளையிட்டார். இயேசுவே அதனை ஒரு தரிசனம் என்று அங்கு குறிப்பிடுவதைக் கவனிக்கவும். ஆதலால் மறுரூபக்காட்சி நிஜமான நிகழ்ச்சி என வேறுவிதமாய் சிந்திப்பது, தரிசனம் என்ற தெளிவான நேரிடையான வேத வசனத்திற்கு முரன்பாடாயிருகிறது.

## வரவிருக்கும் தேவனுடைய மகா அரசாங்கம்

5. மறுரூப மலையில் கிடைத்த தரிசனம் வரவிருக்கும் தேவனுடைய இராஜ்ஜியத்தைப் பற்றியதாகும் என்று பரிசுத்த பேதுரு கூறுகிறார். (**2 பேது 1:16-18**) அவரது மகிமையான ராஜ்யம் இங்கு காட்டப்பட்டிருக்கிறது. மோசே பழைய ஏற்பாட்டு மூப்பராகிய பாத்திரவாங்களையும், எலியா சுவிஷச யுக பரிசுத்தவான்கள் வகுப்பினரையும் குறிக்கிறார்கள். இவர்கள் கிறிஸ்துவுடைய ராஜ்யத்தின் இரண்டு பகுதியான பரலோக ராஜ்யம் மற்றும் பூமிக்குரிய ராஜ்ஜியத்தை அடையாளப்படுத்துகிறார்கள். - **ஆதியாகமம் 22:17**

PV 2:255, WPRS 259, ZWT 558




✡✡✡✡✡✡✡

மேலும் இலவச பிரதிகளுக்கு தொடர்பு கொள்ளவும்:

**98 415 400 81**

**w w w. d i v i n e p l a n . i n**